நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம்,
எம்.ஆர்.சி. நகர். சென்னை–28.

ந.க..எண். 2611/2018/டிபி2 நாள். 13.01.2020.

## சுற்றறிக்கை

**பொருள்** நீர்நிலை ஆக்கிரமிப்புகள் – மாண்புமிகு உயர்நீதிமன்றம் மதுரை கிளை – C.P. எண். 1289/2019 மற்றும் W.P. (MD) எண் 22163/2018–ன்படி நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கு நீர்நிலை ஆக்கிரமிப்புகள் அகற்றுவது – வழிகாட்டி நெறிமுறைகள் வழங்கப்படுவது – தொடர்பாக.

**பார்வை:**
1. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை ஆணை W.P. எண். 22163/2018, நாள். 28.01.2019.
2. தலைமை கணக்காயர் அவர்களின் தணிக்கை அறிக்கை பத்தி எண். 8/2017
3. அரசு கடித எண். 26242/மாந–2/2019–1, நாள். 01.11.2019.

*********

பார்வை 1–ல் காணும் நீதிமன்ற ஆணையின்படியும், பார்வை 2–ல காணும் தலைமை கணக்காயரால் வெளியிடப்பட்ட தணிக்கை அறிக்கையின்படியும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள நீர்நிலைகள் மற்றும் சாலை ஓரங்களில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும்பொருட்டு கீழ்க்கண்டவாறு உரிய நெறிமுறைகள் வழங்கப்படுகிறது.

1. நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குட்பட்ட பகுதிகளில் வருவாய் ஆவணங்களின்படி நீர்நிலை என குறிப்பிட்ட இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை கண்டறிந்து விதிமுறைகளுக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.
2. நீர்நிலை ஆக்கிரமிப்புகள் தொடர்பாக தனிப்பதிவேடுகள் பராமரித்து, அதனை அகற்ற உரிய தொடர் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

(அ) சாலையோர ஆக்கிரமிப்புகளுக்கென்று தனியாக பதிவேடுகள் பராமரிக்க அறிவுறுத்தப்படுகிறது.

3. நகர்புற உள்ளாட்சிகளில் உள்ள திறந்தவெளி பகுதிகளில் நீர்நிலைப்பகுதிகளான குளம் / ஏரி / ஓடை / கால்வாய்களில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதன் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினை பிரதி மாதம் 5–ம் தேதிக்குள் இவ்வலுவலகத்திற்கு அறிக்கையாக சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறது.
4. நீர்நிலை என வகைப்பாடு செய்யப்பட்ட பகுதிகளில் எந்தவித கட்டிட அனுமதியும் வழங்கக்கூடாது என அறிவுறுத்தப்படுகிறது.

நீர்நிலை ஆக்கிரமிப்புகள் தொடர்பான நீதிமன்ற ஆணையின்படியும் தலைமை கணக்காயர் அவர்களின் 2017–ம் வருடத்திய தணிக்கை அறிக்கையில் குறிப்பிட்டவற்றை நிவர்த்தி செய்யும் வகையிலும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், மேற்காண் விதிமுறைகளை அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சி ஆணையர்களும் தவறாமல் கடைபிடிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள் ஒவ்வொரு மாதமும் தவறாது ஆய்வு செய்து, குறிப்பிட்ட காலத்திற்குள் அறிக்கை அனுப்புவதனை உறுதி செய்திட தெரிவிக்கப் படுகிறது.

ஒம்/– கலைச்செல்வி மோகன்
நகராட்சி நிர்வாக ஆணையருக்காக

**பெறுநர்–** அனைத்து மாநகராட்சி / நகராட்சி ஆணையர்கள்
**நகல்–** அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

13.1.2020.
துணை இயக்குநர் (நகரமைப்பு)

13/1/2020

e:\tp section _19.09.2018\tp2\13.01.20_ circular - tp2.doc